DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 12/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | :திரு.ஜெகன் (காவல் ஆய்வாளர்) |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 14.08.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 14th **August 2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தீவிரவாத தடுப்பு பிரிவு மதுரை சரகம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவேங்கடம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 24.10.2015 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் பாலு பதிவு செய்து வைத்திருந்த காவல்நிலையக்குற்ற எண்.159/2015 ச/பி. 294(பி), 341, 323 இதச ன்படியான வழக்கு கோப்பினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 25.10.2015 ம் தேதி காலை 9 மணிக்கு மணிக்கு வழக்கின் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஓம்சக்தி, அய்யனார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் நடராஜன், ஸ்டெல்லா, மகேந்திரன், ஓம்சக்தி,

அய்யனார் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பாலு ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். 26.11.2015 ம் தேதி 19 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை நிலையத்தில்வைத்து கைது செய்து தக்க பிணையத்தில் விடுவித்தேன். அதன்பின்னர் நான் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்குகோப்பினை நிலையப்பொறுப்பில் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

முதல்தகவல் அறிக்கையில் சம்பவம் நடைபெற்ற நாள் மற்றும் தேதியாக முறையே 23.10.2015 மற்றும் 8 மணி என்றும், சம்பவம் பற்றி தகவல் கிடைத்த நாள் மற்றும் நேரமாக முறையே 24.10.2015 மற்றும் 18.30 மணி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரும் அவரது மனைவியும் வீட்டிற்கு வரும் வழியில் எங்கு வைத்துசம்பவம் நடைபெற்றது என்று குறிப்பிட்டு எனது விசாரணையில் துலங்குமா என்றால் பார்வை மகஜரில் நடுவப்பட்டியில் புகார்தாரரின் நிலத்தில் வைத்து சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ இடம் புகார்தாரருக்கு சொந்தமானது என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் ஏதும் புகார்தாரர் அளித்தாரா என்றால் இல்லை. சம்பவ இடம் புகார்தாரருக்கு சொந்தமானதாக இருந்திருந்தால் அவர் அததற்கான ஆவணத்தை விசாரணையின்போது கொடுத்திருப்பார் என்றாலும் அதனால் சம்பவ இடம் புகார்தாருக்கு சொந்தமானது இல்லை என்றாலும் சம்பவ இடத்தில் புகார்தாருக்கு உள்ள உரிமை பற்றி எனக்கு தெரியாது. எனது விசாரணயில் புகார்தாரர் 108 ஆம்புலன்சின் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக துலங்குமா என்றால் துலங்கும். புகாரதாரரின் கு.வி.முச. பிரிவு. 161 ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டபோது மருத்துவமனையில் நான் பதிவுசெய்யும் போது அவருடன் யார் இருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையெழுத்திட்ட நபரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரியல்ல. முதல்தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள நாள் நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் வழிமறித்து புகார்தாரரை அடிக்கவில்லை என்றாலும், புகார்தாரருக்கு உண்மையில் காயம் ஏற்படவில்லை என்றாலும், அவருக்கு

காயம் ஏற்பட்டதாகவும் 108 ஆம்புலன்சில் ஏற்றி அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் பொய்யானது என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும் சரியல்ல.